# இறைவன் இருக்கிறானா?

சிந்தனை விருந்து - 1

ஒரு பெரியவர் அரச மரத்தின் கீழ் அமர்ந்து கடவுளைத் தியானித்துக் கொண்டிருந்தார். அங்கே ஒரு மாணவன் சென்றான். அவன் மிடுக்கும் துடுக்கும் உடையவனாகக் காட்சியளித்தான்.

*மாணவன் :- கடவுள் கடவுள் என்று கூறுவது மூடத்தனம். கடவுளை நீர் கண்ணாற் கண்டிருக்கிறீரா?*
பெரியவர் :- தம்பி காண முயல்கிறேன்.
*மாணவன் :- இல்லாத வொன்றை இருப்பதாகக் கற்பனை செய்து கொண்டு அரிய நேரத்தை வீணடிக்கிறீரே.*
பெரியவர் :- தம்பி! உன் சட்டைப் பையில் என்ன இருக்கிறது?
*மாணவன் :- இது தேன் போத்தல்.*
பெரியவர் :- அப்பா; தேன் இனிக்குமா? கசக்குமா?
*மாணவன் :- தேன் தித்திக்கும்.*
பெரியவர் :- தம்பி! தித்திக்கும் என்றாயே; அது கறுப்பா? சிவப்பா?
*மாணவன் :- ஐயா; தேனின் இனிமையை எப்படி இயம்புவது. இதைக் கண்டவனுக்குத் தெரியாது. உண்டவனே உணர்வான்.*

*பெரியவர் புன்முறுவல் பூத்தார்.*

பெரியவர் :- அப்பா; இந்தப் பௌதிகப் பொருளாக; ஜடவஸ்துவாகவுள்ள தேனின் இனிமையையே உரைக்க முடியாது. உண்டவனே உணர்வான் என்கிறாயே; ஞானப்பொருளாக அனுபவ வஸ்துவாக விளங்கும் இறைவனும் அப்படித்தான். அனுபவத்தாற்றான் உணர்தல் வேண்டும்.

தொகுப்பு :- மகா.